“இந்தத் துணியிலே தங்களுக்கு அழகான ஆடை தைக்கப் போகிறோம். ஆடை தயாரானதும் அதைத் தாங்கள் அணிந்து இந்த நகரில் ஊர்வலம் வர வேண்டும்” என்றார்கள் அந்தப் பொல்லாதவர்கள்.

சக்கரவர்த்தியும் ‘சரி’ என்றார். ஒரு நல்ல நாள் பார்த்து அன்று ஊர்வலம் நடத்துவது என்று முடிவு செய்தார்கள்.

குறித்த நாளில் சக்கரவர்த்தி துணி தயாராகும் வீட்டுக்கு வந்தார். நெசவாளராய் நடித்த இருவரும் சக்கரவர்த்தி அணிந்திருந்த உடைகளைக் கழற்றினார்கள். பிறகு அவர்களில் ஒருவன் கால்சட்டையைப் போட்டுவிடுவது போல் பாசாங்கு செய்தான்; மற்றொருவன் மேல்சட்டையைப் போட்டுவிடுவது போல் நடித்தான். சிறிது நேரத்தில், “ஆஹா! எவ்வளவு அழகாயிருக்கிறது! சக்கரவர்த்திக்கு மிகவும் பொருத்தமான உடை!” என்று அவர்கள் கூறினார்கள். பிறகு ஊர்வலம் புறப்பட்டது.



“எப்படிப் புகழ் சம்பாதிப்பாய்?” என்று கேட்டார் அந்த அம்மையார்.

“நடிகனாவேன். மிக மிகப் பெரிய நடிகனாவேன். கூடிய சீக்கிரத்தில் புகழ் பெற்றுவிடுவேன்” என்று துடுக்காகப் பதிலளித்தார் ஆண்டர்சன். ஆண்டர்சனின் மன உறுதியைப் பாராட்டினார் அந்த அம்மையார்.

ஊரைவிட்டுப் புறப்படும் போது, அங்கிருந்த ஓர் அச்சகத்தாரிடமிருந்து ஆண்டர்சன் ஒரு கடிதம் வாங்கி வந்தார். கோபன் ஹேகனிலுள்ள புகழ் பெற்ற ஒரு நடிகையிடம் கொடுக்க வேண்டிய சிபார்சுக் கடிதமே அது. ஆண்டர்சன் நேராக அந்த நடிகையிடம் சென்றார். கடிதத்தைக் கொடுத்தார். கிழிந்த உடையுடன் வந்த ஆண்டர்சனைப் பார்த்ததும் அவள், “உனக்கு நன்றாக நடிக்கத் தெரியுமா?” என்று கேட்டாள்.



ஈசாப் கதைகள் உலகப் புகழ் பெற்றவை. குழந்தைகள் முதல் ‘குடுகுடு’ கிழவர்கள் வரை எல்லோரும் படித்துச் சுவைக்கலாம். ‘ஓநாயும் ஆட்டுக் குட்டியும்’ ‘சிங்கமும் சுண்டெலியும்’, ‘நரியும் திராட்சையும்’ போன்ற கதைகளை உலகத்தின் மூலை முடுக்கிலுள்ள குழந்தைகள்கூட அறிவார்கள். கிறிஸ்தவ வேதமான பைபிளுக்கு அடுத்தபடியாக உலகில் அதிகமானவர்கள் படித்து வருபவை ஈசாப் கதைகளே!

ஈசாப் முந்நூறுக்கு மேற்பட்ட கதைகளைக் கூறியிருக்கிறார். எல்லாம் குட்டிக் குட்டிக்கதைகளாகவே இருக்கும். நமது பஞ்சதந்திரக் கதைகளைப் போலவே பெரும்பாலான கதைகள் மிருகக் கதைகளாயிருக்கும்; அல்லது பறவைக் கதைகளாயிருக்கும். மேலே கூறப்பட்டதுபோல், சிறிது நீளமாகவும், மனிதர்களைப் பற்றியும் அவர் சொன்ன கதைகள் மிகவும் குறைவுதான்.



உடனே மந்திரிகளை அழைத்தார். “இந்தக் கிளி மிகவும் மக்காக இருக்கிறது. இதற்குப் படிப்புக் கற்றுக் கொடுக்க இப்போதே ஏற்பாடு செய்யுங்கள்” என்று உத்தரவிட்டார்.



மந்திரிகள் பண்டிதர்களை அழைத்து, அவர்களுடன், “இந்தக் கிளிக்கு எப்படிப் பாடம் சொல்லிக் கொடுக்கலாம்” என்று யோசனை செய்தார்கள். கடைசியாக ஒரு முடிவுக்கு வந்தார்கள்.


www.worldtamilacademy.com

சின்ட்ரல்லா கண்களைத் திறந்து பார்த்தாள். என்ன ஆச்சரியம்! அவள் உடம்பில் “பளபள என்று மின்னும் பட்டாடை இருந்தது! அவ்வளவு அழகான உடையை அவள் அதற்கு முன்பார்த்ததே இல்லை. கால்களைப் பார்த்தாள். கண்ணைக் கவரும் இரண்டு கண்ணாடிச் செருப்புகள் இருந்தன!

